JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-1 Witness
for Prosecution

| CC.No. | 220/2025 | Crime No. | | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw.1 சித்ரா** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 10.03.2026 | | | |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை–**

நான் சித்தாரில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்து போன அண்ணாமலை எனது கணவர் ஆவார். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த ஒரு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 5.00 மணிக்கு மேல் நானும் எனது கணவரும் சித்தாரில் உள்ள எங்கள் வீட்டில் இருந்து குறிச்சி செல்லும் சாலையில் குறிச்சியை நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தோம். அப்போது எங்களுக்கு பின்னால் வந்த ஸ்கூட்டி எனது தோளில் இடித்தது. நான் திரும்பிப் பார்த்த பொழுது, எனது கணவர் கீழே கிடந்தார். நான் தூக்கி பார்த்த போது அவருக்கு மூக்கில் இருந்த இரத்தம் வந்தது. பின்னர் அக்கம் பக்கம் இருந்தவர்களை அழைத்து ஆம்புலன்ஸ் மூலமாக எனது கணவரை சுதா மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். அங்கு ஒரு மாத காலம் எனது கணவர் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுக் கொண்டார்.

பின்னர் மீண்டும் தொடர் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். சேலம் அரசு மருத்துவமனையிலும், சுமார் ஒரு மாத காலம் உள்நோயாளியாக எனது கணவர் தங்கி இருந்து சிகிச்சை பெற்றுக் கொண்டார். சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த எனது கணவர் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். எனக்கு சிறிய அடி தான் பட்டது. அந்த அடிக்காக நான் மருத்துவ சிகிச்சை எதுவும் பெற்றுக் கொள்ளவில்லை. விபத்து நடைபெற்ற அன்று போலீசார் ஈரோடு சுதா மருத்துவமனைக்கு வந்து என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றுச் சென்றார்கள். தற்போது, என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:27:51 +0530

கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

மேலும், சேலம் அரசு மருத்துவமனையில் நடைபெற்ற பிரேத விசாரணையின் போது எனது கணவரின் பிரேதத்தை அடையாளம் காட்டி உடனிருந்தேன். நீதிமன்றத்தில் முன்னிலையாகியுள்ள நபர்தான் அன்றே இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்து என் மீதும், என் கணவர் மீதும் மோதி விப்பத்தை ஏற்படுத்தியவர் ஆவார். விபத்து தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருக்கிறது என்கிற விவரம் எனக்குத் தெரியாது என்றால், சரிதான். விபத்து நடந்த சமயத்தில் எதிரி எனக்கு ரூ.1,00,000/- செலவுக்காக கொடுத்தார் என்றால், சரிதான். எனக்கு பின்னால் வந்த வாகனம் எனது தோளில் அடித்ததை எனது புகார் மற்றும் போலீஸ் விசாரணையின் போது நான் கூறவில்லை என்றால், சரிதான். இந்த விபத்திற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல. இந்த விபத்து தொடர்பாக நான் ஈரோடு நீதிமன்றத்தில் நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். நான் நஷ்ட ஈடு பெறுவதற்காக இந்த பொய் புகார் கொடுத்து அந்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:28:01 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-2 Witness
for Prosecution

| CC.No. | 220/2025 | Crime No. | | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| | | |
|---|---|---|
| Name | **PW.2கந்தன்** | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 10.03.2026 | | |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் சித்தாரில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மாலை சுமார் 05.00 மணிக்கு மேல் நான் எனது வேலையை முடித்துவிட்டு சித்தாரிலிருந்து குறிச்சி போகும் வழியில், இயேசு கோயில் அருகில் நான் வந்து கொண்டிருந்தேன். அப்போது எனக்கு முன்பு சிறிது தூரத்தில் ரோட்டில் ஸ்கூட்டி மோதி ஒருவர் கிடந்தார். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்து நடைபெற்ற போது சத்தம் கேட்டுத்தான் பார்த்தேன்.

தற்போது, நீதிமன்றத்தில் முன்னிலையாகியுள்ள நபர் தான் அன்றைய தினம் அந்த ஸ்கூட்டியை ஓட்டி வந்தார். அடிபட்ட அண்ணாமலைக்கு மண்டையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. காது மூக்கில் இருந்து இரத்தம் வந்து கொண்டிருந்தது. பின்னர் அருகில் இருந்தவர்களின் உதவியுடன் அவரை ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன்**
**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

கடந்த 11.10.2024 ஆம் தேதி அன்று மாலை சுமார் 06.00 மணியளவில் நானும், எனக்குத் தெரிந்த முருகேசன் என்பவரும் சித்தாரிலிருந்து, பூனாட்சி செல்லும் மெயின்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.10 18:28:09 +0530

ரோட்டில் சின்ன கவுண்டனூர் பிரிவு அருகில், வீரமாத்தி அம்மன் கோவில் முன்பாக ரோட்டை பார்த்து வாரேன் என்று பேசிக் கொண்டிருந்ததாகவும், அப்போது அதே ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ஒரு ஆணும், பெண்ணும் நடந்து வந்து கொண்டிருந்ததாகவும், அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்த ஒரு ஈ ஸ்கூட்டர் பைக் அந்த ஆணின் மீது மோதியதாகவும், மேற்படி விபத்தை நான் நேரில் பார்த்ததாகவும், அருகில் சென்று பார்த்த போது, அடிபட்டவர் குருசாமி மகன் அன்பழகன் என்று தெரிந்து கொண்டதாகவும், பின்னர் அங்கிருந்தவர்களின் உதவியுடன் அவரை ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவ சிகிச்சைக்கு அனுப்பி வைத்ததாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும், பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் புகார்தாரர் எனது அக்கா மகள் என்றால், சரிதான்.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:28:15 +0530

Sd/– (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-3 Witness
for Prosecution

| CC.No. | 220/2025 | Crime No. | | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| Name | PW.3 முருகேசன் | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 10.03.2026 | | |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் சித்தாரில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மாலை சுமார் 05.00 மணிக்கு மேல் நான் எனது வேலையை முடித்துவிட்டு சித்தாரிலிருந்து குறிச்சி போகும் வழியில், இயேசு கோயில் அருகில் நான் வந்து கொண்டிருந்தேன். அப்போது எனக்கு முன்பு சிறிது தூரத்தில் ரோட்டில் ஸ்கூட்டி மோதி ஒருவர் கிடந்தார். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்து நடைபெற்ற போது சத்தம் கேட்டுத்தான் பார்த்தேன்.

தற்போது நீதிமன்றத்தில் முன்னிலையாகியுள்ள நபர் தான் அன்றைய தினம் அந்த ஸ்கூட்டியை ஓட்டி வந்தார். அடிபட்ட அண்ணாமலைக்கு மண்டையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. காது மூக்கில் இருந்து இரத்தம் வந்து கொண்டிருந்தது. பின்னர் அருகில் இருந்தவர்களின் உதவியுடன் அவரை ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன்**
**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

கடந்த 11.10.2024 ஆம் தேதி அன்று மாலை சுமார் 06.00 மணியளவில் நானும், எனக்குத் தெரிந்த கந்தன் என்பவரும் சித்தாரிலிருந்து, பூனாட்சி செல்லும் மெயின்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.10 18:28:22 +0530

ரோட்டில் சின்ன கவுண்டனூர் பிரிவு அருகில், வீரமாத்தி அம்மன் கோவில் முன்பாக ரோட்டை பார்த்து வாரேன் என்று பேசிக் கொண்டிருந்ததாகவும், அப்போது அதே ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ஒரு ஆணும், பெண்ணும் நடந்து வந்து கொண்டிருந்ததாகவும், அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்த ஒரு ஈ ஸ்கூட்டர் பைக் அந்த ஆணின் மீது மோதியதாகவும், மேற்படி விபத்தை நான் நேரில் பார்த்ததாகவும், அருகில் சென்று பார்த்த போது, அடிபட்டவர் குருசாமி மகன் அன்பழகன் என்று தெரிந்து கொண்டதாகவும், பின்னர் அங்கிருந்தவர்களின் உதவியுடன் அவரை ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவ சிகிச்சைக்கு அனுப்பி வைத்ததாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும், பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court

readover to the witness in the presence

of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:28:28 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani